QP – 081

III Semester B.A./B.Sc./B.Sc.(FAD)/B.C.A. Examination, March/April 2022
(CBCS) (2020-21 and Onwards) (Freshers and Repeaters)
TAMIL LANGUAGE (Paper – III) (Part – I)

Time : 3 Hours Max. Marks : 70

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5×1=5)

1) நான்மணிக்கடிகையின் நூறாவது பாடலை ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தவர்
 1) கால்டுவெல் 2) ஜி.யு. போப்
 3) பெஸ்கிபாதிரியார் 4) உமறுப்புலவர்

2) 'பெருங்கடல்' என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு
 1) பண்புத்தொகை 2) வினைத்தொகை
 3) உவமைத்தொகை 4) உருவகம்

3) 'திரிகடுகம்' என்னும் நூலின் ஆசிரியர்
 1) ஔவையார் 2) கபிலர்
 3) விளம்பிநாகனார் 4) நல்லாதனார்

4) சண்பக மாறன் என்பவன்
 1) மாறன் பெருவழுதி 2) பொற்கைப்பாண்டியன்
 3) வங்கிய சூடாமணிமாறன் 4) பாண்டியன் அறிவுடை நம்பி

5) தமிழ் மொழியின் உயிர்மெய் எழுத்துகள்
 1) 30 2) 216
 3) 12 4) 18

II. விரிவான விடை தருக.

1) மாந்தரின் மனநோயைப் போக்கும் தன்மையுடைய திரிகடுகப் பாடல்களின் கருத்துகளைத் தொகுத்து வரைக. 8

(அல்லது)

'நன்றியில் செல்வம்' குறித்து பழமொழிப் பாடல்கள் கூறும் கருத்துகள் யாவை ?

P.T.O.

2) ''வங்கிய சூடாமணிமாறன்'' தருமிக்குப் பொற்கிழி அளித்தமைக் குறித்து எழுதுக. 8

(அல்லது)

சிவபெருமானுக்கும்-நக்கீரனுக்கும் இடையே நடந்த வாக்குவாதம் குறித்து எழுதுக.

III. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

1) திருவொக்கும் தீதில் ஒழுக்கம் 4

(அல்லது)

வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்

2) கண்ணும் நீலமும் முகங்களும் கமலமும் வாயும்
வண்ண ஆம்பலும் தத்தம்மின் மலைவன அனைய 4

(அல்லது)

தந்தை தாய் இலேன் தனியேன் ஆகிய
மைந்தனேன் புதுவதுவை வேட்கையேன்

IV. 'அழுக்குப்படாத அழகு' என்னும் நூலில் இருந்து பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குத் திறனாய்வு வடிவில் விடை தருக. (2×7=14)

1) அழுக்குப்படாத அழகு-தலைப்புப் பொருத்தம்.

2) நடைபாதை நம்பிக்கை நட்சத்திரங்கள் நாடகம் காட்டும் அழகம்மாள்.

3) சரஸ்வதியின் பாத்திரப் படைப்பை 'உறவுப்பின்னல்கள்' நாடகம் வழி ஆராய்க.

4) தங்கசாமியின் பாத்திரப் படைப்பை ''நடைபாதை நம்பிக்கை நட்சத்திரங்கள்'' நாடகம் வழி விளக்குக.

V. எவையேனும் ஐந்திற்கு விடை தருக. (5×4=20)

1) சார்பெழுத்துகளின் வகைகளைக் குறிப்பிடுக.

2) ஐகார, ஔகார குறுக்கங்களைச் சான்றுடன் விளக்குக.

3) போலியின் வகைகளை விளக்கி வரைக.

4) தொழிற்பெயரைச் சான்றுடன் விளக்குக.

5) முதற்பொருள் குறித்து எழுதுக.

6) வெட்சி, கரந்தைத் திணைகளை விளக்குக.

7) தளை என்றால் என்ன ? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

8) பிறிதுமொழிதல் அணியினை விளக்கி வரைக.

(1×7=7)

VI. ஒன்று குறித்து மடல் வரைக.

1) நீங்கள் வசிக்கும் பகுதியில் தொற்று நோய்கள் பரவாமல் நடவடிக்கை எடுக்கக்கோரி மாநகராட்சி ஆணையருக்கு மடல் ஒன்று வரைக.

2) நடைபாதை ஆக்ரமிப்புகளால், பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைச் சுட்டிக்காட்டி, ஆக்ரமிப்புகளை உடனே அகற்ற நடவடிக்கை எடுக்கக்கோரி, போக்குவரத்து காவல் துறை ஆணையருக்கு புகார் மடல் ஒன்று வரைக.

---